திரு. கே.கே. உமாதேவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாரி வழங்கும் அம்மா அவர்கள் ஆட்சியில், கேட்டதைக் கொடுக்கின்ற அம்மா அவர்கள் ஆட்சியில் ஆம்புலன்ஸ் வழங்குவதாக அறிவித்த அம்மா அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 309, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

309—

சொந்தக் கட்டடம்

***24713—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், கீழ்குடி ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியை எழுதிக் கொடுத்தபோது கீழ்குடி துணை மருத்துவ சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லாமல்தான் இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாகவும் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படியும் இதுவரை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த கீழ்குடியிலுள்ள துணை சுகாதார நிலையத்திற்கு நபார்டு உதவியுடன் சொந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

2003 ஏப்ரல் 24]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. கே.கே. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 310, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.*

310—

ஊனமுற்றவர்களுக்குச் சலுகைகள்

***12513—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசு என்னென்ன சலுகைகள் வழங்கி வருகின்றது?

(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உடல் ஊனமுற்றவர்களுக்கு பல்வேறு சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

(1) சிறப்புக் கல்வி

(2) கல்வி உதவித் தொகை

(3) பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவித் தொகை

(4) வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை

(5) சுய வேலைவாய்ப்பிற்கு அரசு மானியம்